31st March 1958]

Government to acquire the very site on which the railway station stands where it is also logically concluded that lignite may be available underground ?

THE HON. SRI R. VENKATARAMAN : I regret the poor information of the hon. Member. It is not for the purpose of mining lignite that this particular piece of land is sought to be acquired. It is for building godowns, store-houses for petrol, diesel oil and iron and steel materials and so on. The railway station is absolutely necessary for carrying these things to those places.

SRI S. LAZAR : நெய்வேலியில் பல தொழில்களை நிறுவுவதற்கு சர்க்கார் முயற்சிக்கும்போது நடைமுறையில் பல கஷ்டங்கள் இருக்கக்கூடும். இப்போது கேள்விகள் கேட்கப்படுவதிலிருந்து ஒரு சந்தேகம் எழுகிறது. இந்தக் காரியங்கள் வெற்றியடைவதற்கு எதிர் கட்சிக்காரர்கள் ஒத்துழைக்க விரும்புகிறார்களா இல்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

MR. SPEAKER : How does this question arise out of the main question?

SRI M. SELVARAJ : இப்பகுதியிலிருந்து வெளியேற்றப் பட்டிருப்பவர்கள் கோர்ட்டில் ஒரு ரிட் தாக்கல் செய்திருப்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? இதில் ஒரு முடிவு ஏற்படும் வரை இந்த வீடு கட்டிக் கொண்டிருப்பவர்கள் தொடர்ந்து நீடித்து இருப்பதற்கு அரசாங்கம் அனுமதி அளிப்பார்களா ?

MR. SPEAKER : Is the matter before the Court?

THE HON. SRI R. VENKATARAMAN : There is one writ petition filed by some persons asking for the stay of acquisition proceedings. இது 1954-ம் வருஷம் கட்டப்பட்ட வீடுகள். 1953-ம் வருஷம் இயற்றிவிட்ட சட்டத்தின்படி எந்தவிதமான 'இம்ப்ரூவ்மெண்ட்' செய்தாலும் நஷ்ட ஈடு கிடைக்காது. நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் நாட்டுக்கு மிகவும் அவசியம் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்ந்து அவர்களுக்கு இருக்கும் 'இன்புளுயன்ஸ்' ஐ வைத்துக் கொண்டு அங்கு இருப்பவர்களை வேறு இடத்திற்கு போகச் சொன்னால் இந்த திட்டம் சீக்கிரம் நிறைவேறும்.

* 475 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount of compensation per acre paid to the agriculturists evicted from the Neyveli area; and

(*b*) the basis on which the compensation is determined?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The answer is placed on the table of the House.[a]

SRI M. SELVARAJ : சார், இப்போது கொடுக்கப்படுகிற 'காம்பென்சேஷன்' பிளாக் வாரியாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது. அதாவது ஒருவருக்கு 2 ஏகர் நிலம் இருந்தால், ஒரு ஏகரை ஒரு பிளாக்காகப் பிரித்து அதிக விலையும், மற்றொரு ஏகரை வேறொரு பிளாக்காக பிரித்து குறைந்த விலையும் கொடுக்கப்படுகிறது. இந்த பிளாக் முறையில் விலை நிர்ணயம் செய்யாமல் ஒரே தாரமுள்ள நிலங்களுக்கு ஒரே விலை கொடுக்க சர்க்கார் உத்திரவு போடுவார்களா ?

---

[a] Printed as Appendix II on pages 374–375 infra.

[31st March 1958

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் சர்க்கார் உத்திரவு போடுவதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லை. 'காம்பென்சேஷன்' கலெக்டரால் 'லாண்ட் அக்விசிஷன் ஆக்ட்' பிரகாரம் நிர்ணயிக்கப்படுகிறது. அவ்வாறு செய்யப்படுவதில் ஏதாவது அவர்களுக்கு குறைபாடுகள் இருக்குமானுல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

SRI A. GOVINDASAMY : அந்தப் பகுதியில் காலி செய்யப்படாத இடங்களில் சிலர் அதிக விலை கொடுத்து வாங்கி சினிமா கொட்டகை கட்டப்போவதாக தெரிகிறது. இரண்டாயிரம் ரூபாய் பெறுமான நிலங்களுக்கு 250, 300 ரூபாய் கொடுப்பது நியாயமாகுமா ? இந்தத் தொகையை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : லிக்னைட் கார்ப்பரேஷன் வேண்டும் என்பதற்காக, இதில் 'ஸ்பெகுலேஷன்' ஏற்படக்கூடாது என்று 1947-ம் வருஷ மதிப்பு கொடுப்பது என்று தீர்மானம் செய்தாய்விட்டது. வெளி இடங்களில் நிலங்கள் அதிக விலை விற்பதற்கு சர்க்கார் பொறுப்பாளி அல்ல.

SRI K. B. S. MANI : 1947-ம் வருஷத்திய மதிப்பை காம்பென்சேஷனுகக் கொடுப்பதற்கு சட்டம் இயற்றியதாகவும், நஷ்ட ஈடு போதாது என்றுல் அப்பீல் செய்து கொள்வதற்கு உரிமை உண்டு என்றும் கனம் மந்திரி அவர்கள் சொன்னுர்கள். அப்பீல் காலம் முடியும் வரை இந்த வீடுகளை காலி செய்யாமல் இருப்பதற்கு சர்க்கார் உத்திரவு பிறப்பிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி தனியாக ஒரு கேள்வி போட்டால் பரிசீலனை செய்து பதில் சொல்வேன்.

SRI V. K. KOTHANDARAMAN : 1947-ம் வருஷத்திய மதிப்புப்படி நிலத்துக்கு மதிப்பு கொடுக்கப்படுகிறது. காலி நிலத்துக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறதா ? அல்லது கட்டி இருக்கக்கூடிய வீட்டுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN: 1947-ம் வருஷத்திற்குப் பிறகு விவசாயத்திற்காக எந்தவிதமான 'இம்ப்ரூவ்மென்ட்' செய்திருந்தாலும் அதற்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படும். ஆனுல் வீடுகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுவதில்லை.

SRI A. GOVINDASAMY : காலி செய்யப்படும் கிராமங்களில் இளரசம்பட்டு என்ற கிராமமும் ஒன்று. அங்கு 150 ரூபாயிலிருந்து 1,000 வரை காம்பென்சேஷன் தொகை கொடுக்கப்படுகிறது. அங்கு இருக்கும் அதிகாரிகளுக்கு வேண்டியவர்களாய் இருந்தால் தொகையை கொஞ்சம் உயர்த்திக் கொடுக்கிறுர்கள். இந்தப் பிரச்னையில் ஈடுபட்டு அதற்காக கிளர்ச்சி செய்பவர்களாக இருந்தால் தொகை குறைக்கப்படுகிறது. ஆகையால் அரசாங்கம் இந்த விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட விலை கொடுக்க வேண்டும் என்று உத்திரவு போடுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நிலத்தின் தரத்தை ஒட்டியே நஷ்ட ஈடு நிர்ணயிக்கப்படுகிறது. எல்லா நிலங்களும் ஒரே தரமாக இருக்கும் என்று கனம் அங்கத்தினர்கள் சொல்வார்களா என்று தெரியவில்லை. நிலத்தின் தரத்தை ஒட்டியே 150 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை காம்பென்சேஷன் கொடுக்கப்படுகிறது.

SRI M. SELVARAJ : 1947-ம் ஆண்டின் மதிப்புப்படி விலை கொடுக்க வேண்டும் என்று 1953-ம் வருஷத்தில்தான் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆகையால் 1953-ம் வருஷம் வரை கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு அந்த வருஷத்து மார்க்கெட் ரேட்டைப் பொறுத்து நஷ்ட ஈடு கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : சர்க்கார் நஷ்ட ஈடு கொடுப்பதை நிர்ணயிப்பது இல்லை. இதை கலெக்டர் தான் நிர்ணயிக்கிறார். ஆகையால் இதில் சர்க்கார் தலையிடுவதற்கு ஒன்றும் இல்லை. இதில் ஏதாவது புகார்கள் இருக்குமானால் தனிக் கேள்வி போட்டால் சர்க்கார் விசாரணை செய்வார்கள்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : May I know from the Hon. Minister when these acquisition proceedings will be over. In view of the urgency of the matter, will the Government find out the possibility of adopting a quicker method by which these things would be completed?

The Hon. Sri R. VENKATARAMAN : இதில் மக்கள் ஒத்துழைத்தால் மேலும் கடுமையான சட்டங்கள் இயற்றத் தேவையில்லை. இந்த திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை உணர்ந்து கொள்ளாததால் சில எதிர்ப்புகள் இருக்கின்றன. சட்டசபை அங்கத்தினர்களை இந்த விஷயத்தில் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* 476 *Q.*—**Sri A. GOVINDASAMY** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any representations recently from the evicted agriculturists of the Neyveli Lignite area that the compensation paid to them is inadequate and that it should be increased; and

(*b*) if so, the action taken thereon ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Representations have been received from the ryots affected by acquisition of lands at the Neyveli Lignite area.

(*b*) The matter is under consideration.

Sri A. GOVINDASAMY : அந்தப் பகுதி மக்கள் சர்க்காரோடு பூரணமாக ஒத்துழைக்க தயாராக இருக்கிறார்கள். 28 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப் போகும் இந்தத் திட்டத்தில் காம்பென்சேஷனுக்குகாக 2–3 கோடி ரூபாய் ஒதுக்கி, அங்கு இருக்கும் மக்களின் ஒத்துழைப்பைப் பெறும் வகையில் தற்போது உள்ள் காம்பென்சேஷனை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதில் ஓரளவுக்கு கஷ்டம் இருக்கிறது என்பதை சர்க்கார் உணர்ந்து இருக்கிறது. ஏனென்றால் 1947–ம் வருஷத்திய மதிப்பீட்டின்படி காம்பென்சேஷன் கொடுப்பதால் தொகை குறைவாகத்தான் இருக்கிறது. காம்பென்சேஷன் கொடுக்கும் விஷயம் மத்திய சர்க்காரைச் சேர்ந்தது. லிக்னைட் கார்பரேஷன் அவர்களைச் சேர்ந்தது. இது விஷயமாக மாகாண சர்க்கார் வேண்டியவற்றை எடுத்துச் சொல்வதற்கு முன் வருவார்கள்.

Sri S. LAZAR : சார், காம்பென்சேஷனை நிர்ணயிப்பதற்கு சர்க்காருக்கு ஏதாவது உரிமை இருக்கிறதா ? **Is it not a matter for judicial discretion or is it governed by the Land Acquisition Act ?**

The Hon. Sri R. VENKATARAMAN : Yes, that is so. Where representations are made that they are very hard hit, there will be no harm in the Government being a little more liberal.